செ.வெ.எண்:09 நாள்:05.11.2019

# அரியலூர் மாவட்டத்தில் குடிமராமத்துத் திட்டப்பணிகள் மூலம் தூர்வாரப்பட்ட நீர்நிலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் பார்வையிட்டார்.

அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் குருவாலப்பர்கோவில் கிராமத்திலுள்ள பொன்னேரியில் மதகுகள் சீரமைக்கப்பட்ட பணிகள் மற்றும் சித்தமல்லி ஓடையில் எல்லை கற்கல் நடப்பட்ட பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், குருவாலப்பர்கோவில் கிராமத்திலுள்ள 700 ஏக்கர் நீர் பிடிப்பு பகுதியை கொண்ட பொன்னேரியில் 4100 மீட்டர் கரையின் இருபுறங்களும் முற்புதற்கள் அகற்றப்பட்டு, 2100 மீட்டர் தூரம் கொண்ட கரையினை கிராவல் மண் நிரப்பி கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏரியிலுள்ள நீர் ஆதாரத்தைக் கொண்டு 1374 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெருகிறது. இக்குடிமராமத்துத் திட்டப்பணிகள் மூலம் பொன்னேரியில் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாய பயிர்களை பயிரிடும் பணிகளையும், குடிநீர் ஆதாரமான நிலத்தடி நீரும் உயர்ந்துள்ளதையும், மதகு புதுப்பிக்கப்பட்டு தண்ணீர் கசியாத வண்ணம் சீரமைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், சித்தமல்லி கிராமத்தில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் நீர் ஓடையின் நீளம் 500 மீட்டர், அகலம் 60 மீட்டர் அளவுள்ள உபரி நீர் போக்கி செல்லும் நீர் ஓடையினையும், ஓடையின் இருபுறமும் சீரான இடைவெளியில் எல்லை கற்கள் நடப்பட்டுள்ள பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி விவசாயம் செய்து, அதிக மகசூல் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர்ராஜன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீ.வ.ஆ.து) தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் (நீ.வ.ஆ.து) சாந்தி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**